



கழக பவள விழாவை முன்னிட்டு 74 அ வட்டத்தில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு கழகக் கொடியை ஏற்றி வைத்து, பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். மேயர் பிரியா ராஜன், ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர் செ.தமிழ்வேந்தன், வட்டச் செயலாளர்கள் வழக்கறிஞர் ஜி.கிருஷ்ணகுமார், ருத்ரமூர்த்தி, எஸ். புஷ்பராஜ், அபோஸ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று (19.09.2024) தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா முன்னிலையில் திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டான் சிப்காட், தொழிற் பூங்காவில் 870 படுக்கை வசதிகளுடன் அமைக்கப்படவுள்ள குடியிருப்பு வளாகத்தில், 500 பெண் பணியாளர்கள் தங்கும் வகையில் தமிழ்நாடு இண்டஸ்ட்ரியல் ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் (TNIHPL) மற்றும் டாடா பவர் சோலார் லிமிடெட் (T.P Solar Ltd.) இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வின் போது, தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் செயல் இயக்குநர் மற்றும் தமிழ்நாடு இண்டஸ்ட்ரியல் ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் (TNIHPL) நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திருமதி. டி. சினேகா, டாடா பவர் நிறுவன மனித வள மேம்பாடு முதன்மை அலுவலர் திருமதி. அனுபமா ரட்டா, டாடா பவர் சோலார் முதன்மை செயல் அலுவலர் பாலாஜி பார்த்தசாரதி ஆகியோர் பங்கேற்றனர்.

### சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் –

## பகுதிக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள், ஆலோசனைக் கூட்டம் இன்று (20.9.24 வெள்ளிக்கிழமை) மாலை 4.00 மணியளவில் சென்னை, ஓட்டேரி எண்.7 செல்லப்பா தெரு என்ற முகவரியில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள். மண்டலக் குழுத் தலைவர்கள் ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்.

கழக ஆக்கப்பணிகள்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**
செயலாளர்
சென்னை கிழக்கு மாவட்ட திமுக

## 2 நாள்களுக்கு இயல்பை விட வெயில் அதிகரிக்கும்!

சென்னை,செப்.20-

தமிழகத்தில் 2 நாள்களுக்கு 4 டிகிரி வரை வெயில் அதிகரிக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக, தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் அடுத்த 2 நாள்களுக்கு இன்று (செப். 19, செப்.20) அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் 2 டிகிரி முதல் 4 டிகிரி செல்சியஸ் இயல்பை விட அதிகமாக இருக்கக்கூடும்.

அதிக வெப்பநிலை மற்றும் அதிக ஈரப்பதம் இருக்கும்பொழுது ஓரிரு இடங்களில் அசௌகரியம் ஏற்படலாம். அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

அதிகபட்ச வெப்பநிலை 32 டிகிரி செல்சியஸை ஒட்டி யும், குறைந்தபட்ச வெப்ப நிலை 2728 செல்சியஸை ஒட்டியும் இருக்கக் கூடும்.

மன்னார் வளைகுடா, தென்தமிழக கடலோரப்பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கி.மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கி.மீ வேகத்திலும் வீசக்கூடும் இந்த நாளில் மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

### மயிலாடுதுறை மாவட்டத்தில்

## கழக முப்பெரும் விழா பட்டிமன்றம் - பொதுக்கூட்டம்!



### மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. அறிக்கை!

கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் வாரியாக பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா, தந்தை பெரியார் பிறந்தநாள் விழா மற்றும் கழகம்தோற்றுவிக்கப்பட்ட நாள் என முப்பொரும் விழாவாக கழகத்தின் சார்பில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த முப்பெரும் விழாவை மயிலாடுதுறைமாவட்டத்தில் தி.மு.க. பவளவிழா ஆண்டில் பொதுக்கூட்டங்கள், பட்டிமன்ற பொதுக்கூட்டங்கள் கீழ்க்கண்ட விவரப்படி நடத்தப் பட உள்ளது.

இந்தமுப்பெரும் விழா பொதுக்கூட்டங்களில் மயிலாடுதுறை மாவட்டப் பொறுப்பு அமைச்சரும், சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் மாநில, மாவட்டக் கழகநிர்வாகிகள், நாடாளுமன்றமுன்னாள்உறுப்பினர்கள், சட்டமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

| நாள் | பொதுக்கூட்டம் நடத்தும் ஒன்றிய, நகர, பேரூர் கழகங்கள் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|
| 20.9.2024 | செம்பனார்கோயில் வடக்கு ஒன்றியம். | பரசலூர் செல்வம் சதுக்கம். (மிச.பி.மதிவாணன் நினைவரங்கம்) | பட்டிமன்றம் கலைஞர், மு.க.ஸ்டாலின், உதயநிதி ஸ்டாலின் புகழுக்குபெரிதும் காரணம் மக்கள்பணியா? இயக்கப்பணியா? நடுவர் தலைமை அரசுகொறடாகோவி. செழியன் எம்.எல்.ஏ., |
| 21.9.2024 | சீர்காழி மேற்கு ஒன்றியம் | சட்டநாதபுரம் ரவுண்டானா | கழககொள்கைபரப்புச் செயலாளர் திண்டுக்கல் ஐ.லி யோனி |
| 22.9.2024 | செம்பனார் கோயில் மத்திய ஒன்றியம் | | கழககொள்கைபரப்புச் செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி |

குறிப்பு: கூட்ட ஏற்பாடுகளை அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் சிறப்பாக செய்திட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

**நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ.**
செயலாளர்
மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க.

### மாமன்னன் ராஜேந்திரசோழனுக்கு கங்கைகொண்ட சோழபுரத்தில்

## ரூ.22 கோடியில் அருங்காட்சியகம் அமைக்க உத்தரவிட்ட முதல்வருக்கு நன்றி!

### பாராட்டு விழாவில் அமைச்சர் சா.சி.சிவசங்கர் சிறப்புரை!

அரியலூர், செப். 20-

அரியலூர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில், மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஆ.சங்கர் தலைமையில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் முன்னிலை வகித்து உரையாற்றினார்.

ஜெயங்கொண்டம் சுபம் திருமண மண்டபத்தில் "மாமன்னன் ராஜேந்திர சோழனுக்கு கங்கை கொண்ட சோழபுரத்தில் ரூபாய் 22 கோடி மதிப்பீட்டில் அருங்காட்சியகம்" அமைக்க உத்தரவிட்ட,

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி அறிவித்தல் மற்றும் பாராட்டு விழாவில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் மற்றும் ஓய்வு பெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு. இராஜேந்திரன் அய்.ஏ.எஸ். வாழ்த்துரை வழங்கி மாமன்னன் ராஜேந்திர சோழனின் வரலாறுகளை எடுத்துக் கூறி சிறப்புரையாற்றினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் மு.கணேசன், மாவட்ட பொருளாளர் ராஜேந்திரன், நகர செயலாளர் வெ.கொ.கருணாநிதி, ஒன்றிய கழக செயலாளர்கள் இரா.மணிமாறன், ஆர். கலியபெருமாள், காங்கிரஸ் கட்சி சீனி. பாலகிருஷ்ணன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ். ஆர். இராமராஜன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் க.தர்மதுரை, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பானுமதி, மாவட்ட தகவல்தொழில் நுட்ப அணி அமைப்பாளர் குலோத்துங்கன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ச.வசந்தபகலவன், நகர கழக நிர்வாகிகள் எஸ்.ராஜமாணிக்கம், முரசொலி குமார், ஞானபிரகாசம், பா.ரமேஷ், கொளஞ்சியப்பா, கு.பிரபாகரன், மா. செ.செந்தில்குமார், நகர இளைஞரணி அமைப்பாளர் ஆ.கரிகாலன், காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் ராஜசேகரன், ஜெகநாதன், மனோகரன், கங்காதரன், சாமிநாதன், கண்ணன், சக்திவேல், அறிவழகன், அறிவு, ஆனந்தராஜ் கழக நிர்வாகிகள் விஜி, ஆனந்தகுமார், குமரவேல், நடராஜன், அபிஷேக் மற்றும் தி.மு.க., காங்கிரஸ் கட்சி மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

### பேரறிஞர் அண்ணா 116வது பிறந்தநாள் விழா !

## அறந்தாங்கியில் அமைதி ஊர்வலம்! பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவிப்பு!

### அமைச்சர்கள் எஸ்.ரகுபதி ! சிவ.வீ.மெய்யநாதன் மரியாதை செலுத்தினர் !

புதுக்கோட்டை, செப். 20 -

பேரறிஞர் அண்ணா அவர்களின் 116வது பிறந்தநாளையொட்டி புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் அறந்தாங்கியில், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர், சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் மற்றும் கழகத்தினருடன் ஊர்வலமாகச் சென்று பேரறிஞர் பெருந்தகையின் திருவுருவச் சிலைக்கு மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

இந்நிகழ்வுகளில் தேர்தல் பணிக்குழு செயலாளர் பரணிஇ.ஏ.கார்த்திகேயன், அறந்தாங்கி நகரக் கழகச் செயலாளர் க.ராஜேந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.ஆர்.கே கலைமணி, ஒன்றிய கழக செயலாளர்கள் சக்தி ராமசாமி, பொன். கணேசன். எஸ்.எம்.சீனியார், கே. எஸ்.ரவி, எல்.குமார் (எ) துரைக் கண்ணு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் த.மணிராஜன், கீரமங்கலம் பேரூர் கழகச் செயலாளர் கே.சி. சிவக்குமார், அறந்தாங்கி ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் பாத்திமா பீவி, மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் கருணாகரன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சக்திவேல் மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆவடி மாநகராட்சி 46 ஆவது வார்டு லாசர் நகர் பகுதியில் 34 லட்சு ரூபாய் மதிப்பில் 3 புதிய சாலை அமைக்கும் பணியினை முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ பணிகளை தொடங்கி வைத்தார் அருகில் மாநகராட்சி மேயர் உதயகுமார் மண்டல குழு தலைவர் ஜி. ராஜேந்திரன், மாநகர கழக பொறுப்பாளர் சன்.பிரகாஷ், மாவட்ட துணைச் செயலாளர் எஸ். ஜெயபாலன் பகுதி கழக செயலாளர்கள் ஜி.நாராயண பிரசாத், பொன்.விஜயன், பேபிசேகர், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் பெ. வினோத் மாமன்ற உறுப்பினர் மீனாட்சி குமார், உள்பட பலர் உள்ளனர்.

### சின்னசேலம் வடக்கு ஒன்றியத்தில்

## ரூ.5.36 கோடி மதிப்பில் 153 பேருக்கு கலைஞர் வீடு கட்டும் உத்தரவு!

### தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சின்னசேலம், செப். 20 -

கள்ளக்குறிச்சி மாவட்டம்,சங்கராபுரம் சட்டமன்றத் தொகுதி,சின்னசேலம் வடக்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட ஏர்வாய்பட்டிணம், எலியத்தூர், தொட்டியம்,

பாண்டியங்குப்பம், திம்மாபுரம், நாககுப்பம் உள்ளிட்ட 11 ஊராட்சி கிராமங்களில் உள்ள 153 பேரை தேர்வு செய்து அவர்களுக்கு கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் மூலம் 2024 - 2025க்கான வீடு கட்ட உத்தரவு கடிதம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது,இதில் ஒன்றியக் குழு துணைத்தலைவர் அன்பு மணிமாறன் தலைமை தாங்கினார்,

வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ரவிசங்கர், ரங்கராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்,துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பன்னீர்செல்வம் வரவேற்று பேசினார்.

வடக்கு மாவட்ட கழக செயலாளர், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் தா.உதய சூரியன் கலந்து கொண்டு 11 ஊராட்சிகளைச் சேர்ந்த 153 பேருக்கு ரூ.5.36 கோடி மதிப்பில் கலைஞர் கனவு இல்லம் வீடு கட்டும் திட்ட உத்தரவு கடித நகலை வழங்கி தமிழ்நாடு முதல்வர் கழகத் தலைவர்,சமூக நீதிகாவலர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசின் பல்வேறு சாதனைகளை பற்றி பொது மக்களிடம் எடுத்துரைத்து பேசினார்.

இந்த நிகழ்வில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ரங்கசாமி,தாஜ்தீன், ரேணுகா,ரேகா மற்றும் ஊராட்சி மன்ற தலைவர்கள், ஊராட்சி செயலாளர்கள், பயனாளிகள்,கழக நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தூத்துக்குடி கே.வி.கே. சாமி
### செப்டம்பர் 20 (1956)



தி.மு.க. செயற்குழு உறுப்பினராகவும், திருநெல்வேலி மாவட்டக் கழகச் செயலாளராகவும், பல்வேறு தொழிற்சங்கங்களின் தலைவராகவும் பணியாற்றியவர்.

1947ஆம் ஆண்டில் தூத்துக்குடியில் நடைபெற்ற தி.க. மாநில மாநாட்டில் தொண்டர் படைத் தலைவராகப் பணியாற்றியவர்.

1953ஆம் ஆண்டு நடைபெற்ற மும்முனைப் போராட்டத்தின்போது பங்கேற்று சிறை சென்றவர்.

தூத்துக்குடி நகரசபையின் உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**